மேற்கூறிய கருத்துக்களை ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு தமிழக அரசு மத்திய அரசுக்குத் தெரிவித்தது. இது குறித்து மத்திய அரசு பரிசீலனை செய்து வருவதாகத் தெரிகிறது. இதற்கிடையே புதிய அரசு 1967-க்குப் பிறகு பொறுப்பேற்ற பிறகு, இன்றைய அரசு, ஆசிரியர்கள் தொகுதியை நீக்குவது நல்லதல்ல என்கின்ற கொள்கையை அறிவித்திருக்கிறது. முன்பிருந்த மாநில அரசு, சட்டமன்ற மேலவையில் ஆசிரியர்களுக்காக கொடுக்கப்பட்டுள்ள பிரதிநிதித்துவத்தை ரத்து செய்ய வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்தது. இப்படிப்பட்ட நிலையில், தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு வாக்குரிமை அளிக்கும் கேள்வி எழவே இல்லையே என்று மத்திய அரசு மாநில அரசைக் கேட்டுள்ளது. இதற்கு மத்திய அரசு அனுப்பிய பதிலில், "உங்கள் அரசு ஆசிரியர்கள் தொகுதியை எடுத்துவிடுமாறு கூறியிருக்கிறதே, இப்போது ஓட்டுரிமை கேட்கிறீர்களே, இந்த இரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருக்கிறதே" என்று தெரிவித்திருக்கிறார்கள். நாங்கள், ஆசிரியர்கள் தொகுதி இருக்க வேண்டுமென்று வலியுறுத்தி மத்திய அரசுக்குக் கடிதம் எழுதுவதாக இருக்கிறோம்.

Assistant Headmasters in Government (Board) High Schools

* 217 Q.—Thiru S. VELLAPANDIAN (on behalf of Thiru V. ISVARMURTI): Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether there are any proposals under the consideration of the Government to appoint Assistant Headmasters in Government (Board) High Schools in this State?

அரசினர் (கழக) உயர்நிலைப் பள்ளிகளில் உதவித் தலைமை ஆசிரியர்கள்.

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு கல்வி–உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இம்மாநிலத்திலுள்ள அரசினர் (கழக) உயர்நிலைப் பள்ளிகளில் உதவித் தலைமை ஆசிரியர்களை நியமிப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

1972 ஆகஸ்ட் 23]

திரு. எம். ராஜா அய்யர் : தலைவரவர்களே, ஒவ்வொரு பள்ளிக் கூடத்திலேயும், தலைமை ஆசிரியருக்கு உதவியாக ஒரு உதவித் தலைமை ஆசிரியர் நியமிக்கப்படுவது நல்லது என்பதை அரசு ஏற்றுக் கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஆயிரம் மாணவர்களுக்கு மேற்பட்ட மாணவர்கள் இருக்கின்ற உயர்நிலைப் பள்ளியில், தலைமை ஆசிரியருக்கு உதவியாக இருக்கின்ற வகையிலே, துணைத் தலைமை ஆசிரியராக ஒருவரைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற அடிப்படையில் கிட்டத்தட்ட 113 உயர்நிலைப் பள்ளிகளில் துணைத் தலைமை ஆசிரியர்கள் இருக்கிறார்கள். ஆயிரம் மாணவர்களுக்குக் குறைவான எண்ணிக்கை இருந்தால், தலைமை ஆசிரியர் மட்டுமே பணியாற்றி வருகிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Eligibility for Inclusion in the Electoral Roll of the Teachers' Constituency.

* 218. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether Hindi and Sanskrit Pandits posted to Elementary Schools as Teachers and posted to High Schools as Clerks as per G.O. 477, Education, dated 6th April 1968 are eligible to vote at the Election from the Teachers' Constituency to the Tamil Nadu Legislative Council, if they have put in three years of service in Secondary Schools during the last six years; and

(*b*) if so, whether orders have been issued making this point clear?

தமிழ் நாடு சட்ட மன்ற மேலவைக்கு ஆசிரியர் தொகுதியிலிருந்து நடைபெறும் தேர்தலில் வாக்களிக்க தகுதி.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) கல்வித் துறையின் 6—4—1968 நாளிட்ட 477-வது எண் அரசாணையின்படி, தொடக்கப் பள்ளிகளில் ஆசிரியர்களாகவும், உயர்நிலைப் பள்ளிகளில் எழுத்தர்களாகவும் பணியிலமர்த்தப் பட்டுள்ள இந்தி, வடமொழி ஆசிரியர்கள் கடைசி ஆறாண்டுகளில்,